# ஆசியாவின் அபிவிருத்தி யதார்த்தங்கள்

பதிப்பாசிரியர்
கலாநிதி செ.சந்திரசேகரம்
ஆலோசனை பதிப்பாசிரியர்
பேராசிரியர் ஏ.வி.மணிவாசகர்

# Asian Development Realities

## PROF V.P.SIVANATHAN
## Felicitation Volume

# 7

# தென்கிழக்கு ஆசியாவின் நிதி நெருக்கடி

– திரு.எஸ்.எஸ்.உதயகுமார் மற்றும் திருமதி.விஜிதா ரவிசங்கர்

## 1. அறிமுகம்

தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா, ஹொங்கொங் போன்ற நாடுகள் 1997இல் பாரிய நிதி நெருக்கடியை எதிர் நோக்கியதன் காரணமாக இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சியடைந்தது. பணவீக்கம் அதிகரித்தது. நாணயப் பெறுமானத் தேய்வு அதிகரித்தது. ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. அனைத்து பேரினப் பெருளாதாரக் குறிகாட்டிகளும் ஓர் பாதகமான நிலைக்கு சென்றடைந்தன. இந்நாடுகளில் ஏற்பட்ட நெருக்கடி பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுக்கும் சிறிதளவு பரவியது இருப்பினும் சீனா, இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இப்பிரச்சினையால் பாரிய தாக்கம் ஏற்படவில்லை.

நிதி நெருக்கடி வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களின் விளைவால் தோன்றி இருப்பதால் சர்வதேச பொருளியலில் சென்மதி நிலுவையின் மீதிகள் பற்றியும் நாணயமாற்று தொடர்பாகவும் ஓர் பரந்துபட்ட அறிவின் பின்புலத்திலேயே இந் நெருக்கடியை சரியாக விளக்கிக் கொள்ள முடியும்.

திறந்த சந்தைச் பொருளாதாரத்தினால் உள்ள ஆபத்தான அம்சங்களில் இந் நெருக்கடியும் ஒன்றாகும். ஆரம்பத்தில் இந்தோனோசியாவில் தோன்றிய இந் நெருக்கடி பின்பு ஏனைய நாடுகளுக்கும் பரவின. இந்நெருக்கடி தொடர்பாக பல கட்டுரைகளும் வந்துள்ளன. பொருளியல் நோக்கு ஜனவரி பெப்ரவரி 1998 இதழ் இத்தலையங்கத்தைத் தாங்கியே வந்துள்ளது. Asian Economic Journal சஞ்சிகையிலும் பல கட்டுரைகள் இது தொடர்பாக எழுதப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் வர்த்தக சகடஓட்டம் நிகழ்வது ஓர் பொதுவான அம்சமாகும். ஒரு காலத்தில் பொருளாதார முன்னேற்றமும்

இன்னொரு காலத்தில் பொருளாதாரத்தில் பின்னடைவும் இருப்பது பல நாடுகளின் பொருளாதார வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. ஆனால் இப் பின்னடைவு அடுத்த ஆண்டில் மீட்சி பெற்று உயர் நிலைக்கு செல்லாது. இந்நாடுகளில் 1997, 1998, 1999, 2000 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியான ஓர் பின்னடைவு இடம்பெற்றது. இதனால்தான் இந்தப் பொருளாதாரப் பிரச்சினையை மற்றொரு வர்த்தக சகட ஓட்டத்தின் அம்சமாகக் கொள்ளாது "பொருளாதார நிதி நெருக்கடி" என்ற பதம் கொண்டு அழைக்கப்படுகின்றது.

## 2. தென் கிழக்கு ஆசியாவின் நிதி நெருக்கடிக்கான காரணங்கள்:

### I. தென் -கிழக்கு ஆசியாவின் பொருளாதார சுபீட்சம்

இந்நெருக்கடிக்கு இப்பிரதேசத்தில் 1996க்கு முன்னர் காணப்பட்ட பொருளாதார சுபீட்சம் ஓர் காரணமாக அமைந்துள்ளது. குறிப்பாக 1990, மே காலப் பகுதியில் இந்நாடுகளில் பேரினப் பொருளாதார குறிகாட்டிகள் ஓர் அதி வேகமான சுபீட்சப் போக்கை கொண்டிருந்தன. இந்தப் பொருளாதார உன்னத போக்கு 1997இல் ஆரம்பித்த நெருக்கடிக்கு காரணமானது[1].

உயர்ந்த பொருளாதார வளர்ச்சி, ஏற்றுமதி வளர்ச்சி, உயர்ந்த முதலீட்டு வீதம், உயர்ந்த சேமிப்பு வீதம், குறைந்த பணவீக்கம், குறைந்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை, அதீத வெளிநாட்டு முதலீட்டின் உட்பாய்ச்சல் போன்ற உன்னதமான பேரினப் பொருளாதார செயலாற்றமே இந் நெருக்கடியை உருவாக்கியது.

1991-1995 காலப் பகுதியில் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம் 10.5 வீதமாக இருந்தது. இது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சராசரியாக 5 சதவீதமாக இருந்துள்ளது. ஏற்றுமதி வளர்ச்சி வீதம் 1981 -1994 காலப் பகுதியில் சராசரி 11.8 சதவீதமாக இருந்தது ஆனால் இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 4.9 வீதமாக காணப்பட்டது. பணவீக்க வீதம் 1991-1995 காலப்பகுதியில் 6.7 வீதமாக இருந்தது.

---

1 "Rapidly growing economics in south – east Asia are facing an unprecedented economic recesion brought about by their own success" (Kelegama, 1998)

இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 12 வீதமாக காணப்பட்டது.

| குறிகாட்டிகள் | காலம் | தென்கிழக்கு ஆசியா | அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் |
|---|---|---|---|
| 1. பொருளாதார வளர்ச்சி 1991-1995 | 10.5 | 5.0 | |
| 2. ஏற்றுமதி வளர்ச்சி | 1981-1994 | 11.8 | 4.9 |
| 3. பணவீக்கம் | 1991-1995 | 6.7 | 12.0 |
| 4. நடைமுறைக்கணக்கு மீதி (GDP இன் %) | 1991-1995 | 1.4 | 2.3 |
| 5. வெளிநாட்டு கடன் (GDP இன் %) | 1994 | 31 | 38 |
| 6. கடன் சேவை வீதம் (ஏற்றுமதியின் வீதமாக) | 1994 | 12 | 17 |

மூலம் : பொருளியல் நோக்கு ஜனவரி 1998

பிராந்தியங்களாக அன்றி நாடுகளாக நோக்கும் போது 1996க்கு முன்னர் இந்நாடுகளின் பொருளாதாரம் நல்ல செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. இந்நாடுகள் நாணயமாற்று வீதத்தில் 1996க்கு முன்னர் உறுதிப்பாட்டைப் பேணி வந்தனர். Pegging நாணயமாற்று முறை இப் பிராந்தியத்தில் அநேகமான நாடுகளில் உறுதியாகப் பேணப்பட்டன. இது ஏற்றுமதியை அதிகரித்து வர்த்தக நிலுவையை நேர்கணியமாக உயர்வடைய செய்ததோடு வெளிநாட்டு முதலீடு களையும் கவர்ந்து இழுத்தன. நாணயமாற்று வீதத்தை உறுதியாக பேணுகின்ற நாடுகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேர்ந்து எடுக்கின்றனர். தங்கள் முதலீடுகள் திரும்பிச் செல்லும்போது மூலதன இழப்பை நாணயமாற்று வீத உறுதிப்பாடு தவிர்க்கின்றது. உதாரணமாக 1995 இல் 184 தனியார் வெளிநாட்டு நிதிப்பாய்ச்சல் இடம்பெற்றது. இதில் US$ 84 மில்லியன் or 46 வீதம் கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பெற்றன. அதேநேரம் தென் ஆசிய நாடுகள் ஆக $5 பில்லியன் (3%) மட்டும் பெற்றன.

ஜப்பானின் நாணயப் பெறுமானத்தின் ஏற்றம் கிழக்கு ஆசிய நாடுகளில் தொழிற்சாலைகளை அமைக்கத் தூண்டியது. குறைந்த ஊழியத்தின் விலையும் இந்நாடுகளில் இதைத் தூண்டியது.

ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வட்டி வீதம் பட்டியலிடப்பட்ட முதலீட்டைத் தூண்டியது மாறாக அமெரிக்கா வளர்ந்த நாடுகள் உட்பட குறைந்த வட்டி வீதமானது குறைந்த விலையில் நிதியைப் பெற்று அதிக விலையில் கடன் கொடுக்கத் தூண்டியது.

1995இல் தனியார் துறைக்கான தேறிய கடன் பாய்ச்சல் கிழக்கு மற்றும் தென்-கிழக்கு ஆசியாவில் $18 பில்லியன் ஆக இருந்தது. இது தென் ஆசியாவில் $2 பில்லியன் ஆக இருந்தது. ஜப்பானிலும், அமெரிக்காவிலும் குறைந்த வட்டி வீதத்தில் கடன் கொடுத்ததால் ஏற்பட்ட குறைந்த லாபத்தைத் தவிர்த்து இந்நாடுகளில் தாராளமயப்படுத்தப்பட்ட நிதிச் சந்தையைப் பயன்படுத்தி அதிக வட்டிக்கு கடன் கொடுத்ததால் வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் அதிக லாபம் சம்பாதித்தன. இதனால் கவரப்பட்ட பல நிதி நிறுவனங்கள் (வங்கிகள், நிதிக்கம்பனிகள்) பாரியளவு நிதியினை இந்நாடுகளுக்கு நகர்த்தின. இது இந்நாடுகளின் சென்மதி நிலுவையில் மிகைநிலை நிலுவைக்கு இட்டுச் சென்றது.

இவ்வாறு பல்வேறுபட்ட காரணிகளால் தூண்டப்பட்ட பொருளாதார சுபீட்சமானது பேரின பொருளாதாரத்தை குறுங் காலத்தில் உறுதியாகக் கொண்டிருந்தபோதும் நீண்ட காலத்தில இவ் உறுதிப்பாட்டை பேணக்கூடிய வகையில் அமையவில்லை. எனவே 1997இல் இடம் பெற்ற நிதி நெருக்கடிக்கான அடிப்படையான காரணங்கள் தாரளமயமாக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளால் தூண்டப்பட்ட பொருளாதார முன்னேற்றம் ஆகும். இந்தப் பொருளாதார சுபீட்சமானது தன்னகத்தே பலவீனத்தைக் கொண்டிருந்ததோடு வெறுமனே தாராளமயமாக்கல் கொள்கையினால் தூண்டப்பட்ட ஒன்றாகவே இருந்து அடிப்படையில் நீண்ட கால நோக்கில் இதை முகாமை செய்யப்படாத காரணத்தினாலேயே இந் நெருக்கடி தோன்றியது.

**2. மெதுவான ஏற்றுமதி மற்றும் பொருளாதார வளர்ச்சி வீதம்**

ஏற்றுமதியின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணங்கள் அதிகரித்த ஊழியச் செலவு. உதாராணமாக தாய்லாந்தில் ஒரு மணித்தியாலத்துக்கு $1.41 ஆனால் இது சீனாவில் $0.486

இந்தோனேசியாவில் $0.46 ஆகவும் வியட்னாமில் $0.34 ஆகவும் காணப்பட்டது.

யென் நாணயம் அமெரிக்க டொலருக்கு எதிராக பெறுமானத்தில் தேய்வடைந்தமை இந்நாடுகளின் ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையை அதிகரித்தது. முன்னர் 1991-1995 காலத்தில் யென் நாணயத்தின் பெறுமான ஏற்றம், போட்டியைக் குறைத்தது. இது ஏற்றுமதியைத் தூண்டியது. ஆனால் போட்டித் தன்மை அதிகரித்தபோது ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி வீழ்ச்சியானது பொருளாதார வளர்ச்சியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

**3. நுகர்வுச் செலவு அதிகரிப்பு**

ஏற்றுமதி அதிகரிப்பு உயர்வாக இருந்த காலத்தில் மக்களின் வருமானம் அதிகரித்து அவர்களின் நுகர்வு பழக்கவழக்கங்களில் மாற்றம் ஏற்பட்டது. ஏற்றுமதி வீழ்ச்சியடைந்த போதும், அதிகரித்த நுகர்வு பழக்கவழக்கத்தையும் நுகர்வுச் செலவையும் குறைக்க முடியவில்லை. இது முதலீட்டுச் செலவை குறைத்ததோடு இறக்குமதியைத் தூண்டியது. மேலும் இடைநிலை மத்தியதர வர்த்தகமானது வெளிநாட்டுப் பயணங்கள், வெளிநாட்டுக் கல்வி போன்றவற்றில் அதிகம் செலவு செய்ததால் சென்மதி நிலுவையில் இறக்குமதி அதிகரித்து எதிர்மறையான மீதிக்கு சென்றது.

**4. உள்நாட்டு நிறுவனங்கள் வெளிநாட்டில் புதிய முதலீடுகளைச் செய்தமை இது மூலதன வெளிப்பாய்ச்சலை அதிகரித்தது.**

**5. குறும்கால நிதிகளை நீண்ட கால முதலீட்டுத் திட்டங்களில் முதலிட்டமை.**

**6. வெளிநாட்டு கடன்களில் அதிகரிப்பு தாய்லாந்து 150% (GDP இன் வீதம்) தென்கொரியா 105 % ஹொங்கொங் 105% இது USA இல் 37% மட்டும்**

**7. பங்குகளின் விலை வீழ்ச்சி:**

எல்லா நாடுகளிலும் பங்குகளின் விலை வீழ்ச்சியடைந்தது. அரசியல் வாதிகள் அல்லது அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் நட்டத்தில் இயங்கிய நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்கு

சிபார்சு செய்தார்கள் Debt equity ratio உயர்வாக இருந்துள்ளது. மக்கள், முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்தனர். இது மேலும் விலை வீழ்ச்சிக்கு காரணமாகியது.

இந்தோனேசியாவில் வங்கிகள் சுகந்ரீனேவின் குடும்பத்தின் சார்பான தொழல்களுக்கே அதிக கடன்களை வழங்கியதோடு அவற்றை மீண்டும் திருப்பிப் பெறவில்லை.

**8. மத்திய வங்கியின் மீது அரசியல் தலையீடு**

மத்திய வங்கியானது நிதி நிறுவனங்களைச் சரியாக தன்னிச்சையாக முகாமை செய்யக்கூடிய வகையில் தொழிற்பட வைக்கத் தவறியமையால் இந் நெருக்கடி ஏற்பட்டது. உதாரணமாக தாய்லாந்தில் மத்திய வங்கி தவறாக நடந்த கொண்ட வர்த்தக வங்கி மீதோ அல்லது நிதி நிறுவனங்கள் மீதோ காத்திரமான எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. தாய்லாந்திலும் இந்தோனேசியாவிலும் இந்நிதி நிறுவனங்களின் பெரும்பான்மையான பங்கு அரசியல்வாதிக்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு சொந்தமாக இருந்தமையால், அவை நெருக்கடியில் சிக்கிய போது அவற்றை மீட்பதிலும் அரசியல் சார்பு இருந்தமை அவதானிக்கப்பட்டது. சுதந்திரமான மத்திய வங்கியின் செயற்பாடானது இந்நாடுகளில் அரசியல் தலையீட்டினால் தடைப்பட்டிருந்தது. இது இந்நெருக்கடி தோன்றுவதற்குக் காரணமாகியது.

**9. சர்வதேச நிதி நிறுவனங்களின் தவறான நிதி முகாமைத்துவமும் நிலைமையை சரிவரக் கணிக்கத் தவறிமையும்**

நிலைமை மோசமடைவதற்கு முன்னர் சர்வதேச நாணய நிதியம் (IMF) நாணய முகாமைத்துவம் பற்றி சரியாக அறிந்து, கொள்கை சிபார்சுகள் மூலம் சரிப்படுத்தி இருக்குமானால் இந் நெருக்கடி தோன்றியிருக்காது. அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவத்தைச் சீர்ப்படுத்த IMF தவறியதால்தான் இந்த நெருக்கடி தோன்றியதாக பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். தனியார் துறை மற்றும் பொதுத் துறையின் கடன்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதைச் சரியாகக் கணிக்க IMF தவறிவிட்டது.

## 10. நாணயப் பெறுமதி இறக்கமும் தேய்வும் Devaluation/Depreciation

தாய்லாந்து தனது பாத் நாணயத்தை பாதுகாப்பதற்காகத் தனது சர்வதேச ஒதுக்கத்தைப் பயன்படுத்தியது. ஆனால் இவ் ஒதுக்கம் $30 பில்லியனிலிருந்து $9 பில்லியன் ஆக வீழ்ச்சியடைந்தது. மலேசியாவில் $4பில்லியனையும் பிலிப்பின்ஸ் $2 பில்லியனையும் நிக்கிற்றையும் பிஸ்ஸேவையும் பாதுகாப்பதற்கு பயன்படுத்தியது. இவை வட்டி வீதத்தை அதிகரித்தும் பல கட்டுப்பாடுகளை அமுல்படுத்தியும் நிதி வெளிப் பாய்ச்சல்களை கட்டுப்படுத்தின. ஆனால் இந் நடவடிக்கைகள் வினைத்திறமையாக இருக்கவில்லை. பாதுகாப்பு நடவடிக்கைகள் தோல்வி கண்டதன் விளைவாக இறுதியாக நாணயம் மிதக்கவிடப்பட்டது. முதலில் தாய்லாந்து யூலை 1997 பாத் நாணயத்தை மிதக்கவிட்டது. நாணயப் பெறுமான தேய்வு மூலம் குறித்த நாட்டின் போட்டித் தன்மையை அதிகரித்து ஏற்றுமதியை அதிகரிப்பதே பிரதான நோக்கமாகும். ஆனால் இந் நாணயப் பெறுமானத் தேய்வு நாணய வியாபாரிகளிடையே எதிர்பார்ப்பு வர்த்தக நடவடிக்கைகளை ஏற்படுத்தி நிலமையை மேலும் சிக்கலாக்கியது. மேலும் பிராந்தியத்தில் ஒரு நாடு இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலமையை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தபோது இந்நடவடிக்கைகள் ஏனைய நாடுகளைப் பாதித்ததன் விளைவாக அவையும் தமது நாணயங்களை மிதக்க விடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டன. இந்த வகையில் மலேசியா, இந்தோனோசியா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளும் தமது நாணயங்களை மிகக்கவிட்டன. சிங்கப்பூர், தைவான் போன்ற நாடுகள் அதிகளவு ஒதுக்கத்தைக் கொண்டிருந்தும் நாணயப் பெறுமானத் தேய்வுக்குத் தள்ளப்பட்டனர். அவ்வாறு செய்யாது விடின் இவைகள் தங்கள் ஏற்றுமதியை அதிகரிக்க முடியாமல் இருந்தது.

நவம்பர் 1996க்கும் நவம்பர் 1997க்கும் இடையில் பாத் நாணயம் 57%ஆல் வீழ்ச்சியடைந்தது. 44% ரூபில், 32% நிற்கின், 30% பிஸ்ஸோ, 22% வொன், (won –south korea) 14% தைவான் டொலர், 13% சிங்கப்பூர் டொலர் போன்ற அளவில் நாணயப் பெறுமானத் தேய்வு ஏற்ப்பட்டது. ஆனால் ஹொங்கொங் டொலர்

வீழ்ச்சியடையவில்லை. ஹொங்கொங் தனது வட்டி வீதத்தை 300 சதவீதத்தால் அதிகரித்து பங்குச் சந்தையில் 15 சதவீத வீழ்ச்சியை ஏற்படுத்தி தனது நாணயத்தைப் பாதுகாத்தது.

ஊக வாணிபமும் நிதி நெருக்கடி மென்மேலும் தீவிரமடையக் காரணமாக அமைந்துள்ளது. "US hedge funds" நாணயமாற்று வீத தேய்வுக்கு ஓர் பிரதான பங்கினை வகித்துள்ளது.

நடுத்தரகால முதிர்ச்சிக் காலத்தை கொண்ட வங்கிக் கடன், குறுங்கால நிதிகளைப் பெற்று நிதியீட்டம் செய்யப்பட்டது. மேலும் குறுங்காலப் பட்டியலிடப்பட்ட முதலீடுகள் மூலம் திரட்டப்பட்ட நிதி நீண்ட கால முதலீடுகளான வீதி, துறைமுகம், வலு உற்பத்தி போன்றவற்றில் முதலீடு செய்யப்பட்டன. இவற்றின் வருவாய்களைப் பெற நீண்ட காலம் எடுக்கும் என்பதால் முதலீடு செய்யப்பட்ட நிதிக்கான கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு இவ்வருவாய்களை பயன்படுத்தமுடியாமல் இருந்தது.

**II. பங்கு சந்தைகளின் முறிவு அல்லது சிதைவு**

1997இன் முன்னரை ஆண்டில் இந்நெருக்கடிக்கான பரிகாரம் ஓர் சாதகமான விளைவைக் கொண்டிருக்காத காரணத்தால் நம்பிக்கையின் இழப்பு மற்றும் தொடர்ச்சியான நாணயப் பெறுமானத் தேய்வு போன்றன பங்குச் சந்தை முறிவடைவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியது. பொருளாதாரத்தில் பங்குச் சந்தையானது முதலீட்டாளர்களின் நம்பிக்கை அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் ஒரு நிதியமைப்பாகும். பொருளாதாரம் சிறப்பாக செயலாற்றும்போது இந் நம்பிக்கை என்பது மென்மேலும் வளர்ந்து பங்குச் சந்தையின் துரித வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்கிறது. ஆனால் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகள் தீடீரென நம்பிக்கை முறிவுக்குக் காரணமாகியது. ஓர் சிறிய பிரச்சினை ஊகத்தின் அடிப்படையில் பாரிய நம்பிக்கை வீழ்ச்சிக்கு காரணமாகின்றது. தென்கிழக்கு ஆசியாவிலும் இவ்வாறான ஓர் சூழ்நிலையால் மிகவும் சாதுரியமாக 1980-1996 காலப்பகுதியில் கட்டியெழுப்பப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கையானது 1997இல் இடம்பெற்ற பொருளாதார மந்தத்தால்

சிதைவடைந்து பங்குச் சந்தையை முறிவடையத் தூண்டியது. எல்லாப் பங்குகளின் விலைகளும் அநேகமான இப்பிராந்திய நாடுகளில் வீழ்ச்சியடைந்தது. பாங்கொக்கில் நவம்பர் 1997இல் முன்னைய ஒரு வருடத்துடன் ஒப்பிடும்போது பங்குகளின் விலைகள் ஏறத்தாழ 57 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. மணிலாவில் 43 சதவீதத்தாலும், கோலாலம்பூரில் 56 சதவீதத்தாலும், செனெகலில் 34 சதவீதத்தாலும் சிங்கப்பூரில் 24 சதவீதத்தாலும் ஜகார்த்தாவில் 34 சதவீதத்தாலும், ஹொங்கொங்கில் 21 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தள்ளது. இவ்வீழ்ச்சி உலகில் ஏனைய பங்குச் சந்தைகளான நியூயோர்க், லண்டன், டோக்கியோ போன்றவற்றிலும் பிரதிபலித்தது.

## 3. தென்கிழக்கு ஆசியாவின் நிதி நெருக்கடி பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம்

- தாய்லாந்தில் 56 நிதிக்கம்பனிகள் மூடப்பட்டன
- இந்தோனோசியாவில் 16 நிதிக்கம்பனிகள் மூடப்பட்டன (இதில் 3 அரச வங்கி)
- தென்கொரியாவில் 10 நிதிக்கம்பனிகள் மூடப்பட்டன
- இந்தோனோசிவில் 220 பட்டியலிடப்பட்ட கம்பனியில் 200 கம்பனிகள் முறிவடைந்தன. இவைகளில் பல real estate developers ஆகக் காணப்பட்டன. இவற்றைவிட பின்வரும் தாக்கங்கள் ஏற்பட்டன.

    1. ஏற்றுமதி வீழ்ச்சி
    2. பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி
    3. வேலையின்மை வீதம் அதிகரிப்பு
    4. பணவீக்கம் அதிகரிப்பு
    5. நாணயப் பெறுமானத் தெய்வு
    6. சர்வதேச ஒதுக்கத்தின் வீழ்ச்சி
    7. தலாவருமான வீழ்ச்சி

## 4. தென்கிழக்கு ஆசியாவின் நிதி நெருக்கடிக்கான பரிகாரம்:

IMF மற்றும் நட்பு நாடுகளினூடாகப் பெறப்பட்ட நிதி உதவிகள்:

தாய்லாந்து $ 17bn

இந்தோனேசியா $ 43 bn

கொரியா $ 57 bn

IFM பல சீர்திருத்தங்களை முன்மொழிந்தது.

1. பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் குறைத்தல்.
2. பணவீக்கத்தைக் குறைத்தல்.
3. நடைமுறைக் கணக்கு மீதியைக் குறைத்தல்.
4. வரிகளை அதிகரித்தல்.
5. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைக் குறைத்தல்.
6. ஏற்றுமதி மானியத்தைத் தொடர்தல்.
7. இறக்குமதி மீது தடைகளை நடைமுறைப்படுத்தல்.
8. வெளிநாட்டு மூலதனத்துக்காக பொருளாதாரத்தை மென்மேலும் திறந்து விடுதல்.
9. தளர்வுடையதான ஊழியச்சந்தையை உருவாக்குதல்
10. பொருளாதாரத்தின் மீது அரச தலையீட்டை அகற்றுதல் அல்லது தளர்த்துதல்.

**வங்கித் துறை மீதான சீர்திருத்தங்கள்**

i. மத்திய வங்கியை அரசியல் தலையீடு இன்றிச் சுதந்திரமாக செயற்படச் செய்தல். (மத்திய வங்கியின் சுதந்திரத் தன்மையை அதிகரித்தல்)

ii. பிரச்சினைக்குரிய வங்கிகளை ஏனைய வங்கிகளுடன் இணைத்தல் அல்லது மூடுதல்.

iii. வெளிநாட்டு வங்கிகளை தொழிற்பட அனுமதித்தல்.

iv. வட்டி வீதத்தை உயர்வாகப் பேணுதல்.

v. மிகக் கடுமையான வங்கிகளின் மீதான மேற் பார்வை.

vi. நிதிச் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் கடுமையாக நடைமுறைப்படுத்துதல்.

vii. நிறுவனங்களுக்குச் சார்பான இலகு கடன்களை இரத்து செய்தல்.

viii. வங்கிகளை அரசியல் தலையீடின்றி சுதந்திரமாகத் தொழிற்பட அனுமதித்தல்.

ix. நிதிக் கம்பனிகளின் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை உயர்த்துதல்.

1998 ஜனவரி 15இல் அமெரிக்க ஜனதிபதி பில்கிளின்டன் சுகர்னோவுடனான தொலைபேசி உரையாடலில் IMF இன் நிதியையும் அதன் சீர்திருத்தங்களையும் சரிவர நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே நிதி நெருக்கடியில் இருந்து மீளலாம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர்[2].

இருப்பினும் அமெரிக்கா IMF மீது கொண்டிருந்த தலையீட்டையும் முதலாளித்துவத்தின் விஸ்தரிப்புக்கான சீர்திருத்தங்களும் இந்நிதி உதவிகளுடன் பிணைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இது தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்தன. நிதி நெருக்கடி வங்கித்துறை சீர்திருத்தங்களை வேண்டி நின்றபோது IMF இன் சிபார்சுகளுடன், நிபந்தனைகளும் அனைத்துப் பொருளாதாரத்தின் மீது விதிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. மலேசியாவின் பிரதம மந்திரி மகதீர் முகமட், "IMF மெக்சிக்கோவில் வெற்றியீட்டியுள்ளது ஆனால் அந்தப் பரிகார முறை எமக்குப் பயனளிப்பது போல் தோன்றவில்லை. எம்மால் எல்லோருக்கும் பனடோல் வில்லைகளைக் கொடுக்க முடியாது. சிலருக்கு அது ஒவ்வாமையை எடுத்து

2 "The only hope the have of stabilizing the situation is to get on with the IMF Programme" ( Bill Klinden 1998)

வந்து நோயை மேலும் முற்றச் செய்துவிடும். உண்மையிலேயே சர்வதேச நாணய நிதியத்தின் பரிகாரம் பிரச்சினைக்கு தீர்வாக அமையவில்லை" எனக் குறிப்பிட்டுள்ளார்[3].

Harward பல்கலைக்கழகத்தின் பொருளியலாளர் போராசிரியர் Jeffrey Sachas சர்வதேச நாணய நிதியத்தின் பரிகாரம் தொடர்பாக குறிப்பிடும்போது சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள், நோயாளிகளைக் குணப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களைக் கொன்றுவிட முடியும். எனவே அமெரிக்காவில் இருந்தே சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தம் தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன[4] .

சர்வதேச நாணய நிதியத்தின் இறை நண்பனான உலக வங்கியிடம் இருந்து கூட சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தம் தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. உலக வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பொருளியலாளரும் பில்கிளிண்டனின் பொருளாதார ஆலோசகருமான Joseph stiglitz சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தங்கள், நிலமையை சீர்படுத்துவதற்குப் பதிலாக மென்மேலும் தீவிரமாக்கக்கூடியது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்[5].

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகள் வெளிநாட்டு வங்கிகளுக்கு இந்நிதி நெருக்கடியைப் பயன்படுத்தி தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஓர் நிதி வியாபார வாய்ப்பை ஏற்படுத்துவதாக இருந்தது. நமது வார்த்தையில் குறிப்பிட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சுகள் மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை போன்று இருந்தது. வங்கித்துறை சீர்திருத்தம் வெளிநாட்டு வங்கிகளை உள்நாட்டில் கட்டுப்பாடின்றி தொழிற்படுவதை சிபார்சு

3 The IMF has been successful in mexio but IT does not seem to work for us may be we can't give Panadol to every one Some are allergic to it and the illness becomes worse" (Mohumed Mugatheer – 1997)

4 "IMF'S policies instead of carring the patient may actually kill him. If The currency crisis is well managred Asia will be able to resume its rapid economic growth if it is managed with an unthinking (IMF) orthodoxy, The cost could be very high for Asia and The resut of the world" (Jeffery Sachas 1998)

5 "IMF is pushing The Asian countries into the recession not recovery" and IMF south concentrate on Things that make it more difficult to deal with" (Joseph stiglitze 1998)

செய்தது. இது உள்நாட்டு வங்கிகளுக்கு தண்டத்தை விதித்த அதேநேரம் வெளிநாட்டு வங்கிகளுக்கு சிறந்த ஓர் வியாபார சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது.

சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சுகளில் வெளிநாட்டு முதலீடு (மூலதனம்) மீதான கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என்பது பல விமர்சனங்களுக்கு வழிவகுத்தது. சென்மதி நிலுவையில் மூலதனக் கணக்கையும் தாராளமயப்படுத்துவதன் மூலம் இந்நிதி நெருக்கடிக்கு தீர்வு காணமுடியும் என வலியுறுத்திய சர்வதேச நாணய நிதியம் மூலதன கணக்கை தாராளமயப்படுத்தலால் தோன்றும் அபாயகரமான விளைவுகள் பற்றி கவலை கொள்ளவில்லை (Paul Krugman 1998). இச்சீர்திருத்தத்தினால் இந்நாடுகள் தங்கள் நாடுகளில் நிதிச் சந்தையை சீர்படுத்துவதற்கான இயல்தகவு தன்மையை இழக்கின்றன. இது எதிர்காலத்தில் மேலும் பல நிதி நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும் என சுட்டிக் காட்டப்பட்டது. உதாரணமாக சீனா இந்நெருக்கடியில் சிக்கிக்கொள்ளாமைக்குப் பிரதான காரணம் சீனாவின் தாளராளமயமாக்கல் மிகவும் மெதுவாகவும், படிப்படியாகவும் மேற்கொண்டமை ஆகும். சீனா மூலதனக் கணக்கில் கொண்டிருந்த கடுமையான கட்டுப்பாடே சீனாவை இந்நெருக்கடியில் இருந்து பாதுகாத்தது என்பதை பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். தென் ஆசிய நாடுகள் பல இந்நெருக்கடியில் இருந்து தப்பிக்கொண்டமைக்குப் பிரதான காரணமாக இருப்பது இவை மூலதனக் கணக்கில் கொண்டிருந்த சில கட்டுப்பாடுகள் ஆகும். சர்வதேச நாணய நிதியத்தின் ஓர் மாதிரியாகக் கொள்ளப்பட்ட சிலி நாடு கூட குறுங்கால மூலதனப் பாய்ச்சல்கள் மீது சில கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கும்போது, எவ்வாறு ஓர் இன நெருக்கடிக்கு மூலதனக் கட்டுப்பாடுகளை சர்வதேச நாணய நிதியம் சிபார்சு செய்ய முடியும் எனப் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

## 5. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி பலமும் அமெரிக்காவின் தலையீடும்

அமெரிக்கா நெருக்கடி நாடுகளுக்கு பிணை நிற்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியில் கட்டுப்பாடுகளைக்

கொண்டிருந்தது. உதாரணமாக 1997 நவம்பரில் சர்வதேச நாணய நிதியத்தின் மேலதிக $3.5bn உதவு தொகையை அமெரிக்க காங்கிரஸ் நிராகரித்துள்ளது. எனவே அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற ஓர் நிறுவனத்தின் சிபார்சுகளை ஓர் உலக பொது நோக்குள்ள நிறுவனத்தின் சீர்திருத்தங்களாகக் கொண்டு அமுல்படுத்த முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி பலம் அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படுகின்றது. எனவே பலம் இல்லாத ஓர் நிதி நிறுவனத்தின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்வது ஓர் பிராந்திய நெருக்கடிக்கு எப்படி சரியான சிகிச்சையாக இருக்கமுடியும் என்பதை பலர் விமர்சித்துள்ளனர்.

வாஷிங்டனைத் தளமாகக் கொண்ட கெரிரேஜ் பவுண்டேசனின் ஆய்வின்படி IMFஇன் கொள்கை ஆசிய நிதி நெருக்கடிக்கு பரிகாரமாக அமையாது என வாதிடுகின்றனர். உலகத்தில் 89 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அரைப் பங்குக்கு மேற்பட்ட நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை 1965இல் இருந்து பெறுகின்றன. இவை முன்பு இருந்ததைவிட பொருளாதார உறுதிப்பாட்டில் நல்ல நிலைக்குச் செல்லவில்லை என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர். 32 அல்லது இவைகளின் மூன்றில் ஒரு பங்கு நாடுகள் உண்மையாகவே முன்பு இருந்த நிலையை விட கீழ் நிலைக்குச் சென்றுள்ளன. எனவே சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சுகள் இந்நிதி நெருக்கடிக்கு நிரந்தர தீர்வைக் காணமாட்டாது என்பது இவ் ஆய்வின் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

## 6. சர்வதேச நாணய நிதியத்தின் சிபார்சுகளுக்குப் பின்னரும் நெருக்கடி தொடர்ந்தமை

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் நாணயங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிக்குப் பின்னரும் தேய்வடைந்தமையை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| நாடுகள் | நாணயப் பெறுமான தேய்வு வீதம் யூலை 1995 – பெப்ரவரி 1998 | நாணயப் பெறுமான தேய்வு வீதம் நவம்பர் 1997 – பெப்ரவரி 1998 |
|---|---|---|
| இந்தோனேசியா (ரூபிஸ்) | 299.29 | 166.00 |
| மலேசியா (ரிங்கிற்) | 57.55 | -17.33 |

| | | |
|---|---|---|
| பிலிப்பைன்ஸ் (பிஸோ) | 58.22 | 14.54 |
| சிங்கப்பூர் (டொலர்) | 18.57 | 6.41 |
| ஹொங்கொங் (டொலர்) | 0 | 0 |
| தாய்லாந்து (பாத்) | 93.00 | 16.56 |
| தாய்வான் (டொலர்) | 24.01 | 5.12 |
| தென்கொரியா (வொன்) | 105.0 | 60.67 |
| இந்தியா (ரூபா) | 23.21 | 6.21 |
| இலங்கை (ரூபா) | 26.5 | 6.9 |

மூலம்: பொருளியல் நோக்கு

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி 1997 நவம்பரில் கிடைத்த பின்னரும் நாணயம் மென்மேலும் தேய்வடைந்துள்ளது. இது இந்நிறுவனத்தின் பரிகாரம் தகுந்த நிவாரணம் இல்லை என்பதை நிரூபித்துள்ளது. இந்நிதி நெருக்கடிகளின் விளைவுகளில் இருந்து பதினைந்து வருடங்கள் கடந்தும் இப்பிராந்தியத்தில் சில நாடுகள் பழைய நிலைக்கு மீளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## 7. முடிவுரை

உண்மையில் இந்நிதி நெருக்கடியில் சிக்குண்ட நாடுகளில் எந்த நாட்டில் சமூக அரசியல் உறுதிப்பாடு உயர்வாக இருந்ததோ அந்த நாட்டில் நாணயப் பெறுமானத் தேய்வு குறைவாக இருந்துள்ளது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற ஓர் குறைந்த ஜனநாயகத்தைக் கொண்டிருந்த நாடுகள் நீண்டகால உறுதிப்பாட்டை பேணிவந்ததன் காரணமாக இந்நிதி நெருக்கடியில் குறைந்த தாக்கத்தையே கொண்டிருந்துள்ளன. மாறாக இந்தோனேசியா உள்நாட்டுப் போர் மற்றும் அரசியல் தலையீடு ஊழல் மோசடி போன்ற பல காரணங்களால் இந்நெருக்கடியால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. தென் கொரியா மற்றும் தாய்லாந்து என்பன. 1997இல் பலகட்சி ஆட்சி முறையில் அரசியலில் நீடித்த ஓர் ஆட்சி இல்லாத காரணத்தால் முதலீட்டாளரின் நம்பிக்கையைப் பெறுவதில் தோல்வி அடைந்ததன் பயனாக இந் நெருக்கடியால் குறிப்பிடக்கூடிய தாக்கத்தை கொண்டிருந்தன. சுருக்கமாக குறிப்பிடுவோமாயின் சமூக, அரசியல் உறுதிப்பாட்டைக்

கொண்டிருந்த நாடுகள் இந்நெருக்கடியின் தாக்கத்தை குறைத்த அதேநேரம் உறுதியின்மையை கொண்டிருந்த நாடுகளில் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்தோனேசியா இன்று வரை (2015) இந்நெருக்கடிக்கு முன்னர் இருந்த நிலைக்கு செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

-----------------------------

## உசாத்துணை

கலேகம. ஜே.பீ (1998) ஜன/பெ. கிழக்கு மற்றும் தென் கிழக்காசியாவின் நாணய நெருக்கடி, பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு.

சிசர ஜயசூரிய (1998) ஜன/பெப் கிழக்காசிய நெருக்கடியின் தாக்கம்: சில பகுப்பாய்வுகள், பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு.

தேனுவர.எச்.என் (1998) ஜன/பெப் கிழக்காசிய நெருக்கடி: காரணங்கள், தாக்கம் மற்றும் படிப்பினைகள், பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி வெளியீடு.

Kelegama J B.(1998) Financial crises in East and Southeast Asia, Economic review, people bank publication.

Marcus Cieleback (2000 ) The Economic and Currency Crises in South-East Asia. Was it Really so Unexpected

Paul Krugman(1998 ) What happened to Asia, mimeo; Paul Krugman: Bubble, Boom, Crash: Theoretical Notes on Asia's Crisis, mimeo 1998.

ஆசியாவின் அபிவிருத்தி யதார்த்தங்கள்
கலாநிதி செ. சந்திரசேகரத்தால் தொகுக்கப்பட்டது.
பதிப்புரிமை © : செ.சந்திரசேகரம்
பதிப்பு:2015 அபி வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டது.
196/23 தலுவில் லேன் நவாலி வடக்கு மானிப்பாய், யாழ்ப்பாணம்.
வடிவமைப்பு: மறுயுகம், 42 சேர்.பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்
அச்சகம்: யுனைட்டட் மேர்சன்ஸ் பிரிண்டர்ஸ்(பிரை)லிமிட்

Aasiayavin Apiviruththy Yatharththankal
Edited By Dr.S.Santhirasegaram
Copy right © : S.Santhirasegaram
First Edition: 2015
Published by API Publisher
No 196/23 Thaluvil Lane, Navaly North Manipay, Jaffna
Designed by "Maruyuham" 42 Sir.Pon.Ramanathan Road, Jaffna
Printed by : United Merchants Printers (Pvt)Ltd.,
71, Old Moor Street, Colombo-12
ISBN 978-955-44890-7-3